**சுனாமிக்குப் பின்னர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் பங்குபற்றல் கரையோர வலய மீளமைப்பு மற்றும் நிலை பேறான முகாமைத்துவ செயற்திட்டம் - 2013**

---

சுனாமிக்குப் பின்னர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் பங்குபற்றும் கரையோர வலய மீளமைப்பு மற்றும் நிலையான முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎவ்ஏடி) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) இடையில் கைச்சாத்திட்ட 2009 யூலை 23 ஆம் திகதிய ஜீஈஎவ்-எவ்எஸ்பி-5-எல்கே ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் குறித்த ஏற்பாடுகளின் V ஆம் உறுப்புரையின் 5.02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

மானிய உடன்படிக்கையின்படி, கடற்றொழில், மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் கரையோரப் பாதுகாவற் திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராகவும் இருந்தன. எவ்வாறாயினும், 2012 ஏப்ரல் 04 ஆந் திகதிய மானிய உடன்படிக்கையில் செய்யப்பட்ட திருத்தங்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் புதிய நிறைவேற்று முகவராக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு இருக்கின்றது. இலங்கையின் கிழக்கு கரையோரத்தை சேர்ந்த காலநிலை மாறுதலிற்கான நிலைபேறான வாழ்வாதாரங்களிற்கு ஆதரவளித்தல் மற்றும் பாதிப்புக்களைக் குறைத்தல் என்பவற்றிக்கான மீள் நிருமாண செயன்முறைமைக்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட பூகோள முக்கியத்துவமான சுற்றாடல் முறைமையின் பிரதான நீரோட்ட மீளமைப்பு மற்றும் முகாமைத்துவ பாதுகாப்பு என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம், ஐ.அ.டொலர் 7,269,915 ஆன பூகோள சுற்றாடல் வசதி நிதியளிப்பு, ஐ.அ.டொலர் 7,569,450 ஆன இலங்கை அரசாங்க இணை நிதியளிப்பு, என்பவற்றை உள்ளடக்கிய ஐ.அ.டொலர் 14,839,365 ஆகும். 7,569,450 ஆன கூட்டு நிதியளிப்பானது இலங்கை அரசாங்கத்திடமிருந்து ஐ.அ.டொலர் 430,300 விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திடமிருந்து ஐ.அ.டொலர் 7,083,650 மற்றும் உலக பாதுகாப்பு சங்கத்திடமிருந்து ஐ.அ.டொலர் 55,500 என்பவற்றை உள்ளடக்கியது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 செப்தெம்பர் 10 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 செப்தெம்பர் 10 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென்று பட்டியல்படுத்தப்பட்டிருந்தது.

**1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கேல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலிவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் சொல்லப்பட்ட அறவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 3. அபிப்பிரயாம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கும் அமைய,

(அ) செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விசேட (டொலர்) கணக்கின் ஆரம்ப மற்றுமு் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் ரூபா 95,843,611 தொகையாக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 181,926,825 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினம், 2010 செப்தெம்பர் 10 தொடக்கம் 2012 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாகத் தரப்படுகின்றது.

| **ஆக்கக் கூறுகள்** | **2013 ஆம் ஆண்டிற்கான செலவினம்** | **2010 செப்தெம்பர் 10 முதல் 2012 திசெம்பர் 31 வரையான காலத்திற்கான செலவினம்** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| தொழில்நுட்ப உதவி ஆலோசனைகள் | 6,641,510 | 3,881,735 | 10,523,245 |
| சுற்றாடல் முறைமை மீளமைப்பு | 36,685,744 | 24,554,469 | 61,240,213 |
| ஒருங்கிணைத்தல் | 41,845,079 | 15,536,289 | 57,381,368 |
| வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் | 1,253,230 | 26,107,715 | 27,360,945 |
| தொழிற்பாடுகள் மற்றும் பராமரிப்பு | 9,418,048 | 16,003,006 | 25,421,054 |
| மொத்தம் | 95,843,611 | 86,083,214 | 181,926,825 |

### 4.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தவல்களின் படி, மீளாய்வாண்டிற்கான விசேட (டொலர்) கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் அந்த கணக்கில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஐ.அ. டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 321,765 | 40,915,906 |
| கூட்டு : மீள் நிரம்பல்கள் | 1,000,000 | 128,547,150 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 2,044,725 |
| கழி: பற்றுதல்கள் | (705,720) | (90,958,035) |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 616,045 | 80,549,746 |

## 5. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 5.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பாவனை மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட செலவினம் என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | நிதியளிக்க வேண்டுமென உடன்பட்ட தொகை | | வருடாந்த பாதீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை | மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய தொகை | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா. (மில்) | ரூபா. (மில்) | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா. (மில்) | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா. (மில்) |
| ஐடிஏ | 14.50 | 1,929.1 | 338.03 | 0.70 | 91.28 | 1.32 | 172.8 |
| இலங்கை அரசாங்கம் | 0.43 | 55.9 | 5.65 | 0.03 | 4.56 | 0.07 | 9.1 |
| மொத்தம் | 14.93 | 1,985.0 | 343.68 | 0.73 | 95.84 | 1.39 | 181.9 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வேலைத்திட்டத்தின் பிரகாரம், 2010 முதல் 2013 ஆம் ஆண்டுவரையான நான்கு ஆண்டு காலத்திற்காக செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக ரூபா 883,360,000 ஆன தொகை ஒதுக்கப்பட்டது. எவ்வாறாயினும், மொத்த ஒதுக்கீட்டின் 20 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற ரூபா 181,926,825 கூட்டுமொத்தத் தொகை மாத்திரம் 2013 ஆம் ஆண்டு இறுதிவரை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்ட தொகை அந்த நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதிகளில் 22 சதவீதத்தை பயன்படுத்தியிருந்தது, அதேநேரம், முகாமைத்துவ நடவடிக்கைளிற்காக பயன்படுத்திய தொகை அந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையின் 158 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

ஆதலால், திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது முறைப்படி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **நடவடிக்கைகள்** | **ஒதுக்கப்பட்ட தொகை** | **ஏற்பட்ட செலவினம்** | **பயன்பாட்டின் சதவீதம்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | |
| செயற்திட்ட நடவடிக்கைகளிற்கான செலவினம் | 330,030,000 | 74,183,601 | 22 |
| செயற்திட்ட முகாமைத்துவ நடவடிக்கைகளிற்கான செலவினம் | 13,650,000 | 21,659,009 | 158 |

(இ) மேலும், 20 செயற்திட்ட நடவடிக்கைளிற்காக 2013 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட ரூபா 122,550,000 தொகையில், மீளாய்வாண்டு இறுதிவரை அந்த நடவடிக்கைகளில் எவ்வித செலவினமும் ஏற்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில், செயற்திட்டப் பணிப்பாளர் சுற்றாடல் பாதுகாப்பு கடற்கரைப் பகுதியில் வசிக்கின்ற மக்களிற்காக புதிய விடயமொன்று உள்ளதன எனக்கு தெரிவித்தார் மற்றும் ஆகவே, செயற்திட்ட நடவடிக்கைகள் அமுலாக்குவதற்கு முன்னர் பல விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக அவை நடாத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக செயற்திட்டமானது ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்த வீதத்தில் நகர்ந்து செல்லவில்லை.

## 5.2 பௌதீக செயலாற்றல்

### 5.2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம்

செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், 2013 மார்ச் 31 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்த ஏழு செயற்திட்டங்களிற்காக ரூபா 210,009,600 இற்கு சமமான ஐ.அ.டொலர் 1,640,700 கூட்டுமொத்தத் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும், ஐ.அ.டொலர் 1,683,627 (அண்ணளவாக ரூபா 215,504,256) கூட்டுமொத்தத் தொகை ஒதுக்கப்பட்டிருந்த ஏனைய செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக 2013 திசெம்பர் இறுதிக்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய நடவடிக்கைகள் 2013 திசெம்பர் 31 வரை தொடங்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2.2 ஒப்பந்த நிர்வாகம்

(அ) கோமாரி கடல்நீரேரி புனரமைப்பும் கொங்றீட் கம்பங்கள் நாட்டலும்

செயற்திட்ட அலுவலகம் கோமாரி கடல்நீரேரி தூர்வாருவதற்காக பொத்துவில் பிரதேச செயலகத்திற்கு ரூபா 1,170,180 தொகை விடுவிக்கப்பட்டிருந்ததுடன் பிரதேச செயலகம் கோமாரி கடல்நீரேரி புனரமைப்பு மேற்கொள்வதற்கு சமுர்த்தி சங்கத்துடன் உடன்படிக்கையொன்று கைசாத்திட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2012 ஒக்தோபர் 10 அல்லது அதற்கு முன்னர் கோமாரி கடல்நீரேரி புனரமைப்பு பூர்த்தியாக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் வேலைகள் 2013 யூலை 23 ஆந் திகதியே சங்கத்தால் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உடன்படிக்கையின் 5 ஆம் உட்பிரிவின் பிரகாரம் ஒப்பந்தக்காரரிமிருந்து ரூபா 78,900 தொகையான தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) கோமாரி கடல்நீரேரி ஒதுக்கத்தை இனங்காணாமல், ரூபா 414,003 கிரயத்தில் 450 கொங்றீட் கம்பங்கள் கோமாரி கடல்நீரேரியைச் சுற்றி நாட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக, 25 கம்பங்களை அகற்றுவதற்காகவும் வேறு இடங்களில் நாட்டுவதற்கும் மேலதிகமாக ரூபா 19,403 தொகை செலவழிக்க வேண்டியிருந்தது.

(ஆ) பாலமீன்மடு- மட்டக்களப்பில் கினீயடி தூனாவில் பாதுகாப்பு சுவரின் நிர்மாணம்

---

செயற்திட்டமனது கினீயடி தூனாவில் பாதுகாப்பு சுவரின் நிர்மாணிப்பிற்கு 2013 இல் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு ரூபா 1,000,000 தொகையை விடுவித்திருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிர்மாண வேலைகள் தொடங்குவதற்கு முன்னர் முறையான சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, மழைக் காலத்தின் போது அடித்தளம் அடித்துச் செல்லப்பட்டமை காரணமாக பாதுகாப்பு சுவர் சேதமடையும் ஆபத்துக் காணப்பட்டது.

(ii) மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், மேற்குறிப்பிட்ட நிர்மாண வேலைகளிற்காக ரூபா 886,132 தொகை மாத்திரம் செலவழிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 113,867 வைப்புக் கணக்குகளில் விடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்திற்காக பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 1,000,000 ஆன முழுத் தொகையும் இந்த நிர்மாணத்திற்காக செலவழிக்கப்பட்டிருந்ததென அறிக்கையிடப்பட்டிருந்தது.

**5.2.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

---

அம்பாறை செயற்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் சுற்றாடல் முறைமை மீளமைப்பு ஒருங்கிணைத்தல் பிரிவிற்கு 2013 யூலை 01 இல் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்ட திகதியிலிருந்து கடமைக்காக வருகை தந்திருக்கவில்லை. எவ்வாறாயினும், 2014 பெப்ரவரி மாதம் வரை படிகளாக அவருக்கு ரூபா 84,333 தொகை செலுத்தப்பட்டிருந்தது.